ஓம் ஈஸ்வராய நமஹ!
ஓம் ஸ்ரீ பரிமள குரு அன்னையே போற்றி!

ஆதவனாம் ஈச தரிசனம் அந்தி சந்தியில் முறையோடு செய்த பலன் போராற்றல்களின் பெருங்கருணையால், முழு உணர்வு நிலையோடு நிகழ்ந்த எமது ஆத்ம விடுதலை எனும் உன்னத நிலை!

ஆகாரம் என்பதுவே
ஆதவனின் ஆற்றல் என்ற
அதி உன்னத நிலை அறிவாய் தொழுதிடுவாய் கதிரவனை
ஆதவனை சிரசேந்தி
போற்றி நிற்கும் மானிடனே
அறிவாற்றல் மிகக் கொண்டு
பரமனையும் தரிசிப்பான்
ஞானி எனும் நிலை கொண்டு!
--க.கா அகத்தியர் ஐயாவின் அருளுரை

திரிசூலத்தில் துவங்கி வேலில் முடிந்த எனது ஆத்ம விடுதலை:

19-4-19 வெள்ளிக்கிழமை சித்திரா பௌர்ணமி ஆத்ம விடுதலை நிகழ்வுகள்:
அதிகாலை 4.30மணிக்கு ஆலயம் சென்றோம்.

ஆறுமுகனார் தேர்ந்தெடுத்து அமர சொன்ன விதமாக (முதல் 18), அகண்ட சோதியின் வலமுன்புறம் அமர வைக்கப்பட்டேன்.


ஆலய சோதியுடன் விழி திறந்து இணையும் போதே இடப்பறத்திலிருந்து தேக மைய நடுத் தண்டு அடிபற்றி மேலாக அத்தண்டு வழி நேராக மேல் சுழன்று ஒரு ஆற்றல் சென்றது இருமுறை.

பின் சோதி திரிசூலமாக தோன்றத் துவங்கியது. கண் சிமிட்டியும் பார்க்க அழகிய திரிசூல வடிவம் தெரிந்தது.

சற்று நேரத்தில் இடப்புற தலைக்கு மேல்



ஒளி தோன்றியது.
பின் கீழ் வலப்புற பக்கவாட்டிலிருந்து வெண்ணிற மிகப் பிரகாச ஒளி



(அகத்தியர் ஐயா, பரதவசி ஐயா) என் மேல் ஒன்றி தலைக்கு அருகில் உயர்ந்தது.
பின் இடப்பக்க சிரசு அருகில்



அருணகிரி நாதரின் திவ்ய உயிர்.... ஒளிக் காட்சி அளித்து என் சிரசில் புக எனது உயிர் அகத்தியர் மற்றும் பரதவாசி ஐயாவுடன் பயணிக்க ஆரம்பித்தது.

சுற்றிலும் ஆறுமுகனாரின் பேரொளி வளையமாக சூழந்தது. பின் அதைக் கடந்து ஒரு சில பேரொளி உலகங்களைக் கடந்து சற்று நேரம் அப்படியே காத்துக் கொண்டிருந்தோம்.


தூரத்தில் இருந்து ஒளி இழைப் பாலம் தங்க,வெள்ளி, செம்பு, பாதரச வண்ணங்களில் அழகாக விரிந்து மேல் நோக்கி வந்து கொண்டிருந்தது.



பின் விண்முகடு கடந்து அண்டம் அடைந்து எனது ஈர்ப்பு கிரகமான செவ்வாய் கோளினை அவ்விரு மகான்களும் மிக அருகில் காணச் செய்தனர். செவ்வாய்க் கோளின் சுழல் வட்டம் கண்டு பின் அவ்விடத்திலிருந்தே பல கோள்களைக் கண்டேன்.



முச்சு நெருக்க மேலேறியவாறு இருந்தோம்.
பின் சூரியனின் மேற்புற தங்க நிறக் கதிர்களை ஊடுருவி ,



தங்க வாயில் கடந்து உள்ளே வெகு நேரம் பயணித்தோம். எங்கும் பேரொளிமயம்.வெகு நேரம் உற்று நோக்கிக் கொண்டே இருக்க ஒரு அசைவு ஏற்பட்டது. அவ்வசைவு எனை ஈர்ப்போடு கண்டு கொண்டே இருந்தது.

சற்றே பின்னால் ஈர்க்கப்பட ஒரு அழகிய இளம் புன்னகை பூத்திடும் தேவியின் தரிசனம் கிடைத்தது. தேவியவளைக் கண்டு கொண்டே இருந்தேன்

'கொடி மங்கை உள்ளுறை கோயில்'

அத்திவ்ய தேவியை வெகு நேரம் கண்டு கொண்டே இருக்க அத் தேவியும் புன்முறுவலுடன் தன் அழகிய நயனத்தால் எனைக் கண்டு கொண்டே இருந்தார். எனைக் கண்டு கொண்டேன் அத்தேவியான ஆதிபராசக்தியிடம்..................!

ஓம்காரம் மெலிதாக ஒலிக்கிறது.

நான் யார் என விளங்க தீவிரமாக அந்நிலையிலிருந்து விலக்கப்பட்டு பின்னால் ஈர்க்கப்பட்டு புவியை நோக்கி பேரொளி மயமாக மூச்சு நெருக்க பின் பலவாறாக அதிர்ந்து கீழ் இறங்கினேன்..

ஓம்கார ஒலி நன்றாகக் கேட்கிறது.

குரு அம்மாவின் குரல் ஒலிக்கத் துவங்கியது.

பாதாள லோகம் சென்று ரேணுகா தேவியின் தலைமையில் உள்ள நவ சக்திகளின் ஆசிகள் பெற்று ஆலய அகண்ட சோதியில் கலந்திட குரு அன்னை கூற அவ்வாறே வேலான மைய ஜோதியை கண்ணுற்று வணங்கி எனது ஆத்ம விடுதலை ஒளிப்பயணம் இனிதே நிறைவு பெற்றது.

இவ்வாறு எமது ஆத்ம விடுதலை ஆறுமுகனார் தலைமையில் சப்த ரிஷிகளின் துணையுடன் பல உயர் சித்த பேராற்றல்கள் துணையுடன் கிடைக்கப் பெற்றோம்.

மகத்தான இந்நிகழ்வுக்கு துணையாய் இருந்த அனைவருக்கும் பல கோடி நன்றிகள் !!!!!!

இத்துணை நேரம் உடலில் இருந்து காத்த அருணகிரி நாதரை போற்றி வணங்குகிறேன்!!!!!!

நச்சு அரவு ஆட்டிய நம்பன் போற்றி!
பிச்சு எமை ஏற்றிய பெரியோன் போற்றி!!

ஈசனே! சிவகாமி நேசனே! எனை ஈன்ற தில்லைவாழ் நடராஜனே!!!!!!!

*************************************””*********

**12-5-25** சற்குருநாதரின் சித்ரா பௌர்ணமி ஈசக்கலப்பு அருளுரை

குருதியானது நுண்ணியமாக நீர்த்தால் மாத்திரமே சிரசில் மேலேறி பத்தாம் வட்ட ஞான அணுக்களைத் தீண்டும். மேலும் மேலும் பதமுற்று கனிந்து நின்றால் மணமானது பிராண காற்றின் அதி உன்னத நுண்ணிய மூலக்கூறு என்பது ஞான அணுக்களை ஊடுருவி உட் சென்று அதன் மைய அணுக்களை வெற்றிட எரிபொருளோடு கலந்து ஞானத்தின் உச்சத்தினை அறிவிற்கும் வெளிப்படுத்தும். அனைவரும் உணர்ந்து செயல் புரியுங்கள் ஒவ்வொரு முழு நிலவு தினம் அதிலும் இது தியானத்தினை மேற்கொண்டிடுங்கள்.

சிரசில் உள்ள நேர்மறை அணுக்கள் பூரண ஆற்றல்களால் நிறைந்து இருப்பது முழு நிலவு தினம் அன்றே. அத் தினத்தில் மாத்திரமே உயர் பிராண காற்றின் மூலக்கூறுகளின் மூலம் மனம் எனும் (=பிராணகாற்று) கருவியானது நேர்மறை

அணுக்களை தீண்டி அதனையும் கடந்து நிர்மல அணுக்களை நோக்கி பயணிக்க அனுமதி அருளிடும்.

ஏன் நான்கு தெய்வங்கள் மனதையும் உடலையும் உயிரையும் ஆன்மாவினையும் தனித்து காவல் புரிகின்றனர் எனில் அவை யாவும் நான்கு வித கனிம இழைகளின் வெளிப்பாடு என்றே உணர வேண்டும்.

நான்கு வித இழைகளும் ஒன்று கூடி உதவினால் மாத்திரமே மணமானது மூலத்தினில் ஒடங்கும். மனம் ஒடுங்கினால் மாத்திரமே உடலும் உயிரும் மூலத்தினில் ஒடுங்கிட இயலும்.

மனம் ஒடுங்கி ஆன்ம ஸ்வருபத்தினை உணர்ந்து உத்தம நிலைகளை எய்திடுங்கள்.